**செய்தி வெளியீடு எண்: 152** **நாள்: 21.02.2020**

**இன்று (21.2.2020) சென்னையில் நடைபெற்ற பொருளாதார மற்றும் முதலீடு வாய்ப்புகளை மையமாகக் கொண்டு தமிழ்நாட்டிற்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு தூதுக்குழு – தொலைத் தொடர் நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை**

**மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.**

உலகில் உள்ள மொழிகளில் பழமையான, இலக்கிய வளம் கொண்ட தமிழ் மொழியை தன்னகத்தே கொண்ட, தொன்மையான நாகரிகங்களின் பிறப்பிடமாக விளங்கும் தமிழ்நாட்டிற்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவரையும் வருக, வருக என்று வரவேற்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்துள்ள**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்
**திரு. எம்.சி.சம்பத்** அவர்களே!

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர்
**திரு. க.சண்முகம்** அவர்களே!

இந்திய வெளியுறவுத் துறையின் செயலாளர்
**திரு. திருமூர்த்தி** அவர்களே!

இந்திய வெளியுறவுத் துறையின் கூடுதல் செயலாளர்
**திரு. ஹரிஷ்** அவர்களே!

தேசிய தொழில் பெருந்தடத் திட்ட மேம்பாடு மற்றும் செயலாக்கக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர்
**திரு. சஞ்சய் மூர்த்தி** அவர்களே!

தொழில் துறை முதன்மைச் செயலாளர்
**திரு. நா.முருகானந்தம்** அவர்களே!

GUIDANCE நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்
**முனைவர் நீரஜ் மித்தல்** அவர்களே!

டிட்கோ நிறுவனத்தின்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
**திருமதி. காகர்லா உஷா** அவர்களே!

இந்திய வெளியுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர்களே!

தொழில் தலைவர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையினரே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

‘‘**யாதும் ஊரே யாவரும் கேளிர்**’’ என கனியன் பூங்குன்றனார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே உலகத்து மக்கள் அனைவரும் உறவினர்களே என்ற கருத்தின்படி தான் வாழ்ந்து வருகிறார்கள் எங்கள் தமிழ்நாட்டு மக்கள். பாரம்பரிய சிறப்பு வாய்ந்த தமிழ்நாட்டில் நிலவும் தொழில் சூழல் குறித்தும், சமூக கலாச்சார சிறப்புகள் குறித்தும் அறிந்து கொள்ள உலக நாடுகள் பலவற்றிலிருந்து பிரதிநிதிகளாக இங்கே வந்திருக்கும் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழர்கள் பண்டைய காலத்தில் கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கினர். தமிழ்நாட்டிலுள்ள கயல், கொற்கை, பூம்புகார், வஞ்சி போன்ற பண்டைய துறைமுகங்களின் வழியாக கிரேக்கம், சீனா, ரோமானியம் உள்ளிட்ட நாடுகளில் உள்ளவர்களுடன் தமிழ்நாடு அன்றைய காலக்கட்டத்திலே வாணிகம் செய்தது என்பதை பெருமையுடன் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

பன்னெடுங்காலமாக விவசாயம், தொழிற்சாலைகள், கல்வி, கலாச்சாரம், வணிகம் என அனைத்துத் துறைகளிலும் சிறப்பிடம் பெற்று **நல் ஆளுமையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலம்** என்ற பெருமையை தமிழ்நாடு இன்று பெற்றுள்ளது. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே முதலிடத்தில் இருக்கும் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி பற்றி இங்கே விரிவாக எடுத்துச்சொல்ல விரும்புகின்றேன்.

- திறன்மிக்க மனிதவளத்தின் இருப்பிடம்.
- வாகனங்கள் மற்றும் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி, துணிநூல் உற்பத்தி, காற்றாலை மின்சார உற்பத்தி, தகவல் தொழில் நுட்பச் சேவைகள் என அனைத்திலும் தமிழ்நாடு தான் முதலிடம்.
- இந்தியாவின் இரண்டாவது பெரும் பொருளாதார மாநிலமான தமிழ்நாட்டில் தான், “ஃபார்ச்சூன் 500’’–ன் 62 நிறுவனங்கள் அமைந்துள்ளன.
- ‘‘**அமைதி, வளம், வளர்ச்சி**’’ என மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வகுத்த பாதையில் பயணித்து, சட்டம் ஒழுங்கை செம்மையாகப் பராமரித்து, சமூக மேம்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சி என அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்திருக்கும் இந்தியாவின் ஒரே மாநிலம், தமிழ்நாடுதான்.

- **இந்தியா டுடே பத்திரிகையின் ஆய்வின்படி, ஒட்டுமொத்த வளர்ச்சியில் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை இரண்டாவது முறையாக தேர்வு செய்துள்ளது.**
- Frost and Sullivan நிறுவனம் வெளியிட்ட பொருளாதார வளர்ச்சி குறியீடு, நிதி ஆயோக் வெளியிட்டுள்ள புத்தாக்கக் குறியீடு, NCEAR அமைப்பு வெளியிட்டுள்ள முதலீட்டு வாய்ப்புகளுக்கான தர வரிசை ஆகியவற்றில் **இரண்டாம் இடத்தை** தமிழ்நாடு பெற்றுள்ளது.
- இன்று, இந்தியாவின் மூன்றாவது பெரிய ஏற்றுமதி மாநிலமான தமிழ்நாடு, இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை, இங்குள்ள நான்கு பெரும் துறைமுகங்கள் மற்றும் நான்கு சர்வதேச விமான நிலையங்கள் மூலமாக, உலகெங்கும் ஏற்றுமதி செய்கிறது.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிகம் விரும்பி வரும் இடமும் தமிழ்நாடுதான். கல்லிலே கலைவண்ணம் கண்ட மாமல்லபுரம், தரணி போற்றும் தஞ்சை பெரிய கோவில், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம், சித்தன்னவாசல், மதுரை, சிந்துவெளி விட்ட இடமும், சங்கத்தமிழ் தொட்ட இடமும் ஒன்றே என அறிஞர் பலரையும் கூற வைத்திருக்கும் கீழடி, ஆதிச்சநல்லூர், இயற்கை எழில் கொஞ்சும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள் என, உள்ளத்தை பரவசப்படுத்தும் இடங்கள் தமிழ்நாட்டில் ஏராளமாக உள்ளன. இவற்றை எல்லாம் கண்டு களிக்க உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றேன்.
- உலகெங்கும் உள்ள தொழில் முனைவோரை தமிழ்நாட்டில் தொழில் துவங்க ஈர்க்கும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான தமிழ்நாடு அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. கடந்த ஆண்டு நடைபெற்ற **உலக முதலீட்டாளர் மாநாட்டில்**, ஜப்பான், கொரியா, பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா, பின்லாந்து உள்ளிட்ட பல நாடுகளின் நிறுவனங்கள் **304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 3 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகளை** தமிழ்நாட்டில் மேற்கொள்ள உறுதியளித்துள்ளன. இவற்றில், **59** நிறுவனங்கள் ஏற்கனவே தமது வணிக உற்பத்தியை துவங்கிவிட்டன. மேலும் **219** நிறுவனங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

- இந்தியாவில் மிகப்பெரிய கழிவுநீரை நன்னீராக்கும் ஆலைகள், கடல் நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், மழைநீர் சேகரிப்பு திட்டம், குடிமராமத்து திட்டம், நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் என நீர் மேலாண்மையில் தன்னிறைவு பெறும் வகையிலான பல திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.
- வணிகம் புரிதலை எளிதாக்க பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள், இணையவழி ஒற்றைச் சாளர முறை, பசுமை வகைப்பாட்டு தொழில் நிறுவனங்களுக்கு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் அனுமதி பெறும் வழிவகைகளை எளிதாக்குதல், முதலீடுகளைக் கண்காணித்து விரைவுபடுத்த எனது தலைமையிலான உயர்மட்டக் குழு என தொழில் துறையை ஊக்குவிக்க பல நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வந்துள்ளது.
- எனது தலைமையிலான உயர்மட்ட குழுவினர், அரசு முறைப் பயணமாக இங்கிலாந்து, அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்குச் சென்றதன் பயனாக **8 ஆயிரத்து 835 கோடி ரூபாய் அளவிற்கான முதலீடுகள் தமிழ்நாட்டிற்கு ஈர்க்கப்பட்டுள்ளன.** இதில் பல திட்டங்கள் தற்போது துவக்கப்பட்டுள்ளன.
- குறிப்பாக இன்று நான் துவக்கி வைத்த ஜோஹோ ஹெல்த் நிறுவனம் உறுதியளித்த முதலீட்டை விட 16 மடங்கு அதிக முதலீட்டை மேற்கொண்டுள்ளது.
- இன்று துவக்கி வைக்கப்பட்ட கொரியாவின் ஹெனான் மற்றும் ஜப்பானின் மிட்சுபா சைகால் ஆகிய நிறுவனங்கள் தங்களுடைய தொழிற்சாலைகளை இங்கு அமைத்துள்ளது, தமிழ்நாட்டில் நிலவும் சிறப்பான தொழிற் சூழலுக்கு மேலும் ஒரு சான்றாக அமைந்துள்ளது.
- இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ள தமிழ்நாடு பாலிமர் தொழிற்பூங்கா, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுக்காவில் 250 ஏக்கர் பரப்பளவில் 217 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டிட்கோ மற்றும் சிப்காட் நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் அமைக்கப்படுகிறது. நவீன வசதிகளுடன் கூடிய இப்பூங்கா 3 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்த்து சுமார் 7000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

- எனது அரசின் இதுபோன்ற சிறப்பான முயற்சிகளுக்கு உறுதுணையாக உங்களைப் போன்ற வெளிநாடுகளின் தூதுவர்கள் பலர் ஆற்றிவரும் சிறப்பான பங்களிப்பை மறக்க முடியாது. எனது அரசு முறை பயணத்தின்போது இந்திய வெளியுறவுத் துறையும், அந்தந்த நாடுகளின் பல்வேறு துறைகளும் சிறப்பான ஒத்துழைப்பை வழங்கின.
- ஃபோர்டு, ஹுண்டாய், யமஹா போன்ற நிறுவனங்கள் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக செயல்படுவதற்கும், புதிய பல முதலீடுகளை தமிழ்நாட்டில் செய்வதற்கும், இங்குள்ள வெளிநாடுகளின் தூதரகங்கள் சிறப்பான வழிகாட்டுதல்களையும், பெரும் பங்களிப்பையும் வழங்கி வருகின்றன.
- ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் தமிழ்நாடு அரசு கூட்டுப்பணி குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. இக்குழு, குறிப்பிட்ட கால இடைவெளியில் கூடி, அந்நாட்டு தொழில் நிறுவனங்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளை களைந்து வருகிறது. பிரான்ஸ், அமெரிக்கா, கொரியா, ஆகிய நாடுகளின் தூதரகங்களும் தொழில் துறையுடன் தொடர்ந்து இணைந்து செயல்பட்டு வருகின்றன.
- உலக நாடுகள் பலவற்றிலும் இருந்து வந்திருக்கும் நீங்கள், தமிழ்நாட்டிற்கும் உங்கள் நாட்டிற்கும் நல்லதொரு இணைப்புப் பாலமாக திகழ வேண்டும். தொழில் நிறுவனங்கள் மட்டுமின்றி, உங்கள் நாட்டின் அரசு நிறுவனங்களும், உட்கட்டமைப்பு உள்ளிட்ட பல துறைகளில் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு நீங்கள் உதவிகரமாக இருக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.
- சூழல் சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் நம் நாடுகளுக்கு இடையே உள்ள ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டும்.
- உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதை வரவேற்க "**யாதும் ஊரே**" என்ற திட்டத்தை நியூயார்க் நகரில் நான் துவக்கி வைத்துள்ளேன். இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.
- மின்சார வாகனப் பூங்கா, வானூர்தி தொழில் பூங்கா, நிதி சேவைகளுக்கான நகரம், பாலிமர் பூங்கா, உணவுப் பூங்கா என முதலீடுக்குப் பல வாய்ப்புகள் இங்கு உள்ளன. ஆழ்கடல் மீன்பிடி திட்டங்கள் புதிய ஏற்றுமதி வாய்ப்புகளை

வழங்கியுள்ளது. சேலம் அருகே தலைவாசலில் அமைய உள்ள உலகத் தரத்திலான கால்நடை பூங்கா, பால் மற்றும் பால் பொருட்கள் ஏற்றுமதிக்கான வாய்ப்பினை வழங்கும்.

- சேலம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் மத்திய அரசு உதவியுடன் விரைவில் அமைய இருக்கும் மெகா ஜவுளி பூங்காவிலும் நீங்கள் பங்கு பெறலாம், பயன் பெறலாம் என நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.
- தகவல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறையிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. குறிப்பாக, சென்னை இன்று இந்தியாவின் Saas Capital of India என்று கூறும் அளவிற்கு பல புதிய தொழில்நுட்ப நிறுவனங்கள் சென்னையில் தொடங்கப்பட்டு வருகின்றன. மிகப் பெரிய நிறுவனங்களும் தங்களுடைய கிளைகளை சென்னையில் திறந்துள்ளன. இதற்குக் காரணம், தமிழ்நாடு ஒரு அமைதியான மாநிலமாகவும், நவீன தொழில்நுட்பத் தேவைகளை நிறைவேற்றுகின்ற அளவிற்கு மனிதவள ஆற்றல் கொண்ட மாநிலமாகவும் விளங்குகிறது. இங்கு ஆண்டுதோறும் லட்சக் கணக்கான மாணவர்கள் தங்கள் உயர் கல்வியை முடித்துவிட்டு, திறமை மிக்க பொறியாளர்களாக வெளி வருகின்றனர்.
- தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் அடுத்த கட்டமாக தொழில் பெருந்தடத் திட்டங்கள் அமையும். தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உட்கட்டமைப்பு மற்றும் தொழில் வளர்ச்சியில் நவீன உலக சூழலுக்கு ஏற்ப, அடுத்தக் கட்டத்திற்கு முன்னேற்றும் சூழலை இத்திட்டங்கள் உருவாக்கும். இன்று சென்னை பெங்களூர் தொழில் பெருந்தட திட்ட செயலாக்கத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லாக தேசிய தொழில் பெருந்தட மேம்பாட்டுக் கழகத்திற்கும், தமிழ்நாடு அரசின் டிட்கோ நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- உலக மக்கள் தொகையில் ஆறில் ஒரு பகுதியை கொண்டுள்ள இந்தியாவின் வளர்ச்சி, உலகத்தை புதிய யுகத்திற்கு அழைத்துச் செல்லக் கூடியது. இந்தியாவின் வளர்ச்சியில் தமிழ்நாடு பெரும் பங்கினை வகித்து வருகிறது. எனவேதான், ஆசியாவிலேயே முதலீட்டுக்கு ஏற்ற சிறந்த இடமாக தமிழ்நாடு உயர்வடைய வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

நிர்ணயித்த இலக்கை நோக்கி, எனது தலைமையிலான அரசு பயணித்து வருகிறது.

- எங்களின் இந்த பயணத்தில், உங்கள் அனைவரின் அன்பையும், ஒத்துழைப்பையும் நான் கேட்டுக் கொள்கிறேன். உண்மையில், இந்த பயணம், நாளைய நமது வெற்றியின் துவக்கமாய் அமையட்டும் என வாழ்த்தி, என் அன்பான விருந்தினர்களாகிய உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

Dear Investors, Be assured, I am here to take care you. Most Welcome.

இந்த நல்ல நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த இந்திய வெளியுறவுத் துறையின் செயலாளர், கூடுதல் செயலாளர் மற்றும் அலுவலர்களுக்கு எனது பாராட்டுகளை தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**